டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 26.11.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 133 | Madurai | Online Edition

விவசாயிகளுக்கு உகந்த கொள்கைகளை செயல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது

மத்திய அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான்

புது தில்லி, நவ.25

பஞ்சாப் மாநிலம் தர்ன் தரன் மாவட்டத்தின் பூ ஹவெலியான் கிராமத்தில் நடைபெற்ற விவசாயிகளுடனான சந்திப்பு நிகழ்ச்சியில் மத்திய வேளாண், விவசாயிகள் நலன், ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் கலந்து கொண்டு உரையாற்றினார். விவசாயிகளுடன் வயல்வெளியில் அமர்ந்து அவர்களுடைய பிரச்சனைகளையும் கருத்துக்களையும் அவர் கேட்டறிந்தார். பயிர்க் கழிவுகளை எரிக்காமல் நவீன வேளாண் முறைகளை பின்பற்றக் கூடிய முற்போக்கு விவசாயிகளையும் பஞ்சாயத்துக்களையும் சௌகான் பாராட்டினார். தான் ஒரு பெரிய அரசியல் கூட்டத்தை நடத்துவதற்காக வரவில்லை என்றும், ஒரு சேவகராக அமர்ந்து அவர்களுடைய கவலைகளை புரிந்து கொள்ளவே வந்ததாக அவர் தெளிவாக குறிப்பிட்டார். விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை பஞ்சாப் அரசு செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். விவசாயிகளுக்கு உகந்த கொள்கைகளை செயல்படுத்துதல், குறைந்தபட்ச ஆதரவு விலையில் சாதனை அளவிற்கு கொள்முதல் செய்தல் ஆகியவற்றில் பிரதமர் மோடி அரசு உறுதிப்பாட்டுடன் உள்ளதாக அவர் கூறினார்.

ஒட்டு மொத்த நாட்டிற்கும் உணவளிக்க விவசாயிகள் இரவு பகலாக பணியாற்றுகின்றனர் என்று அவர் தெரிவித்தார். தாம் ஒரு தலைவர் அல்ல என்றும், விவசாயிகளின் சேவகர் என்றும் அவர் கூறினார். மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்றும், தான் தோன்றித்தனம், பொறாமை, வெறுப்பு ஆகியவற்றில் இருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் குரு நானக் தேவும் அறிவுறுத்தி உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சிறுதானியங்களில் தரமான விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி



மதுரை, நவ.25 பட்டியலின விவசாயிகளுக்கு சத்துமிகு தானியங்களான சிறுதானியங்களில் விதை உற்பத்தி பயிற்சி மதுரை மாவட்டம், சேடப்பட்டி வட்டாரம், அ.காமாட்சிபுரம் கிராமத்தில் 5 நாட்கள் நடைபெறுகிறது.

இந்திய சிறுதானிய ஆராய்ச்சி நிறுவனம், ஹைதராபாத் நிதி உதவியோடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரையில் உள்ள விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறையின் மூலம் நடைபெறுகிறது. துவக்க நிகழ்வில் முனைவர் அலெக்ஸ் ஆல்பர்ட் வரவேற்புரை வழங்கினார். அனுமித்ரா, தான் அறக்கட்டளை, சேடப்பட்டி, வாழ்த்துரை வழங்கினார்.

முனைவர் சுஜாதா, பேராசிரியர் மற்றும் தலைவர், விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, தனது தலைமை யுரையில் தரமான விதைகளின் முக்கியத்துவம் மற்றும் விதை உற்பத்தியின் மூலம் அதிக லாபம் பெறலாம் என எடுத்து கூறினார்.

துவக்க விழாவின் நிறைவாக முனைவர் வேணுதேவன், நன்றி கூறினார். தொடர்ந்து முனைவர் அலெக்ஸ் ஆல்பர்ட், விதை உற்பத்தியின் கோட்பாடுகள் பற்றியும், முனைவர் சுஜாதா, பேராசிரியர் மற்றும் தலைவர், கலவன் அகற்றுவதின் முக்கியத் துவம் பற்றியும் தொழில்நுட்ப உரையாற்றினார்கள். விவசாயி களுக்கு விதை அமிர்த விதை நேர்த்தி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. 30க்கும் மேற்பட்ட பட்டியலின விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு பயணடைந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

கார்த்திகை பட்டத்தில் அதிக மகசூல் பெற விதைப்பரிசோதனை அவசியம்

நாமக்கல், நவ.25

நாமக்கல் மாவட்டத்தில் கார்த்திகை பட்டம் நிலக்கடலை சாகுபடி செய்ய உரிய பருவமாகும். நிலக்கடலை சாகுபடிக்கு நிலம் தயாரிக்கும் பொழுது இருமுறை உழவு செய்து மண்கட்டிகள் இல்லாமல் பொலபொலப்பாக புழுதி ஆகும் வரை தயார் செய்து விதைத்தல் அவசியம்.

நிலக்கடலையில், VRI 10, Girnar 4, Girnar 5,TMV 14, ஆகிய ரகங்கள் கார்த்திகை பட்டத்திற்கு உகந்ததாகும். மண் பரிசோதனையின் படி உரமிடுதல் சிறந்ததது. நிலக்கடலை பயிரில் உற்பத்தியை அதிகரித்து திரட்சியான காய்கள் பிடிக்கவும், எண்ணெய் சத்து அதிகரிக்கவும் ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சத்தை இருமுறை பிரித்து இட வேண்டும். முதல் 80 கிலோ ஜிப்சம் அடியுரமாகவும், பின்னர் 40-45-ம் நாளில் களையெடுப்பின் போது 80 கிலோ ஜிப்சமும் இட்டு பிறகு மண் அணைக்க வேண்டும்.

விதைகளின் தரம் நன்றாக இருந்தால் மட்டுமே உரிய பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு அதிக மகசூல் பெற்று பயனடைய முடியும். ஆதலால் கார்த்திகைப் பட்டத்தில் பயிர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் விதைப்பிற்கு முன்னர் விதைப் பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து விதைப்பு செய்-யலாம். தரமான நிலக்கடலை விதையில் குறைந்தபட்சம் 70% முளைப்புத்திறன், 96% புறத்தூய்மை, அதிகபட்சம் 9% ஈரப்பதம் இருத்தல் வேண்டும்.

விதையின் தரத்தை அறிந்து கொள்ள நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கூடுதல் வளாக கட்டிடத்தில் அறை எண்.13 இல் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு மாதிரிக்கு ரூ.80/- கட்டணம் செலுத்தி விதையின் தரத்தை அறிந்து பயனடையலாம் என வேளாண்மை அலுவலர் செ.தேவிப்பிரியா தெரிவித்துள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

அரியலூர் வட்டாரத்தில் விவசாயிகள் கலந்துரையாடல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி



அரியலூர், நவ.25

அரியலூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை துணை இயக்குனர், வேளாண்மை உதவி இயக்குனர், தோட்டக் கலை உதவி இயக்குனர், வேளாண்மை அலுவலர், மேலும் வேளாண் பொறியியல் துறை அலுவலர் பயிர் காப்பீட்டு நிறுவன மேலாளர் ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகளிடையே அவர்களின் குறைகளை கேட்டும் தங்களது துறைகளில் உள்ள மானிய திட்டங்களை விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

மேலும் நிலவுடமை பதிவு செய்யாத விவசாயிகள் உடனடியாக வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி நில உடமை பதிவேடு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர் நில உடமை பதிவேடு செய்வதற்கு தங்களுடைய ஆதார் கார்டு, கணினி சிட்டா நகல் மற்றும் ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ள கைபேசி ஆகிய வற்றுடன் வேளாண் விரிவாக மையத்தை அணுகி பயன் பெறுமாறும் கேட்டுக் கொண்டனர்.

மேலும் கீரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் அசோக்குமார் கலந்து கொண்டு தற்போதைய கால சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் விவசாயத்திற்கு தேவைப்படும் தொழில் நுட்பங்கள் பற்றி விவசாயிகளிடையே எடுத்துரைத்தார். இந்த கூட்டத்தில் ஏராள மான விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை அதிகாரிகளிடையே பகிர்ந்து கொண்டனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

ஆலத்தூரில் நெல் வயல் தின விழா



பெரம்பலூர், நவ.25

நெல் பயிரில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தவும், இரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை விவசாயிகளிடையே ஊக்குவிக்கவும், 14 வார உழவர் வயல்வெளிப் பள்ளியானது பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றியம், அழகிரிபாளையம் கிராமத்தில் நடத்தப்பட்டது.

இந்த உழவர் வயல்வெளிப் பள்ளியின் 14 வாரப் பயிற்சி நிறைவடைந்ததைத் தொடர்ந்து, வயல் தின விழாவானது 23.11.26 அன்று நடைபெற்றது.

இவ்விழாவில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சியைச் சேர்ந்த ராஜேஸ்வரி, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தனது உரையில், உழவர் வயல்வெளிப் பள்ளியின் மூலம் விவசாயிகள் கற்றுக்கொண்ட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்களைத் தங்களது வயல்களில் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்றும், இரசாயன பூச்சிக்கொல்லி களின் பயன்பாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும், உழவர் வயல்வெளிப் பள்ளியின் நோக்கம் முழுமை யாக நிறைவேற, விவசாயிகள் பயிற்சியில் கற்றுக்கொண்ட தொழில்நுட்பங்களைத் தங்களது வயல்களில் நடைமுறைப் படுத்த முன்வர வேண்டும் என வலியுறுத்தினார்.

இவ்வயல் தின விழாவில் மொத்தம் 35 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மேலும், நிகழ்வில் பங்கேற்ற விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு (IPM) இடுபொருள் தொகுப்புகள் வழங்கப்பட்டன.

சிறப்பு பருவ நெற்பயிருக்கு காப்பீடு செய்ய டிசம்பர் 1-ஆம் தேதி கடைசி நாள்

செங்கல்பட்டு, நவ.25

விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்கள் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஈடு செய்து வாழ்வாதாரத்தை மீட்கும் வகையில் பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 2026-27-ஆம் ஆண்டு சிறப்பு பருவ பயிர்களை காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 2026-27-ஆம் ஆண்டிற்கு சிறப்பு பருவத்தில் பயிர் காப்பீடு அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் சாகுபடி செய்துள்ள சம்பா நெல்-II பயிருக்கு பயிர் காப்பீடு செய்-யலாம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் இவ்வாண்டில் சிறப்பு பருவத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் சாகுபடி செய்துள்ள சம்பா நெல்-II பயிருக்கு டிசம்பர் 1 தேதி வரையில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். காப்பீடு கட்டணம் ஏக்கருக்கு 573/-. காப்பீட்டுத் தொகையை பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் வங்கிகள் மூலம் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம். அதற்கு தேவை யான ஆவணங்கள் நடப்பு பருவ அடங்கல், சிட்டா, வங்கி கணக்கு புத்தக நகல், ஆதார் அட்டை ஆகியவை ஆகும். பதிவு செய்யும் போது விவசாயிகள் பெயர் மற்றும் விலாசம், நிலப்பரப்பு, சர்வே எண் மற்றும் உட்பிரிவு, பயிரிடப்பட்டுள்ள நிலம் இருக்கும் கிராமம் மற்றும் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களை சரியாக கவனித்து பதிவு செய்து கொள்ளவும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில், 2026-27-ஆம் ஆண்டு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் சிறப்பு பருவத்தில் அக்ரிகல்ச்சர் இன்சுரன்ஸ் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட் என்ற காப்பீடு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட சம்பா நெல்-II பயிரை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி வரை காத்திருக்காமல் முன்னதாகவே காப்பீடு செய்ய செங்கல்பட்டு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எம்.ஸ்டீபன் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

விதையின் தரம் அறிந்திட விதைப்பரிசோதனை அவசியம்

திருச்சி, நவ.25

திருச்சி விதைப்பரிசோதனை அலுவலர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், கார்த்திகை பட்டத்தில் தேவையான விதையின் தரத்தை அறிந்து சாகுபடி செய்திட அறிவுரை கூறினார். ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80 கட்டணம் செலுத்தி விதைப் பரிசோதனை செய்து தெரிந்து கொள்ளலாம். கார்த்திகை பட்டத்தில் உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, கம்பு, சூரியகாந்தி, எள் மற்றும் நெல் (பின்சம்பா) போன்ற பயிர்கள் சாகுபடி செய்யும் போது விதையின் தரத்தினை தெரிந்து கொண்டு தரமான விதைகளை விதைப்பதன் மூலம் நல்ல மகசூல் பெறலாம்.

விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று துறையின் கீழ் புத்தூர் நால்ரோட்டில் ஒருங்கிணைந்த விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று வளாகத்தின் கீழ்த்தளத்தில் இயங்கி வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத் திறன், பிறரகக் கலப்பு ஆகிய நான்கு பரிசோதனைகள் செய்யப் படுகின்றன. விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனை யாளர்கள் மட்டுமின்றி விவசாயிகளும் தங்களிடம் உள்ள விதை யின் தரத்தை பரிசோதனை செய்து அறிந்து கொள்ளலாம்.

விதையின் முளைப்புத் திறனை தெரிந்து கொண்டு விதையளவை முடிவு செய்யலாம்.விதையின் ஈரப்பதத்தை தெரிந்து கொண்டு சரியான ஈரப்பதத்தில் விதையினை சேமித்து வைக்கும் போது பூச்சி நோய் தாக்குதல் ஏற்படாமல் பாதுகாக்கலாம். பிறரகக் கலப்பு பரிசோதனையின் மூலம் வேறு ரக விதைகள் கலந்துள்ளதா என தெரிந்து கொண்டு விதையின் தரம் குறையாமல் பார்த்துக் கொள்ளலாம்.

தற்போது பருவமழை பெய்து வருவதால் விவசாயிகள் விதைப்பதற்கு முன் விதைப் பரிசோதனை செய்து விதையின் தரத்தை தெரிந்து கொள்ள வேண்டுமென திருச்சி மாவட்ட விதைப்பரிசோதனை அலுவலர் ஆ.லீமாரோஸ், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் இரா.புவனேஸ்வரி ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

நக்கசேலம் கிராமத்தில் ஆந்திரா பொன்னி நெல் நாற்று நடவு செய்த வேளாண் மாணவிகள்

பெரம்பலூர், நவ.25

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், நக்கசேலம் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு B.Sc. (Hons.) Agriculture மாணவிகள் வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாகக் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.



இதன் ஒரு பகுதியாக, நவம்பர் 20-ஆம் தேதி நக்கசேலம் கிராமத்தில் விவசாயிகளுடன் இணைந்து ஆந்திரா பொன்னி நெல் ரக நாற்றுகளை நடவு செய்யும் பணியில் மாணவிகள் ஈடுபட்டனர். இந்நாற்றுகள் துறையூரில் உள்ள பசுமை விகடன் நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்டவையாகும். மாணவிகள் விவசாயிகளுக்கு உதவியாக வயலில் நாற்றுகளை நடவு செய்ததுடன், நடவு செய்யும் முறை, நாற்றுகளுக்கு இடையிலான இடைவெளி மற்றும் நடவு நுட்பங்கள் குறித்தும் நேரடியாகக் கற்றுக்கொண்டனர்.

நடவுப் பணியின்போது விவசாயிகள் பாரம்பரிய நடவுப் பாடல்களைப் பாடி மாணவிகளுக்குக் கற்றுக் கொடுத்தனர். மாணவிகளும் விவசாயிகளுடன் இணைந்து அப்பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர். இது அவர்களுக்கு வேளாண் பண்பாடு மற்றும் கிராமிய மரபுகளை அறிந்துகொள்ளும் சிறந்த அனுபவமாக அமைந்தது. இந்தக் களப்பணியின் மூலம் மாணவிகள் நெல் நடவு குறித்த நேரடி வயல்வெளி அனுபவத்தையும், விவசாயிகளுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றனர்.

தேசிய மின்னணு வேளாண் சந்தை மற்றும் பண்ணை வாயில் வர்த்தகம் குறித்த விவசாயிகள் பயிற்சி



மதுரை, நவ.25

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டாரம் வேளாண்மைத் துறை, வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கள்ளிக்குடி கிராமத்தில் 25.11.26 அன்று தேசிய மின்னணு வேளாண் சந்தை மற்றும் பண்ணை வாயில் வர்த்தகம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

மதுரை மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன், பயிற்சியினை துவக்கி வைத்து அனைவரையும் வரவேற்றார். மத்திய அரசின் திட்டமான கேச் பச்சாவோ அபியான் விளை நிலம் காப்போம் இயக்கம் திட்டத்தின் கீழ் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல், இரசாயன உரப்பயன்பாட்டினை குறைத்து மண்வளத்தை மேம்படுத்துதல், திரவ உயிர் உரங்கள் மற்றும் மண்புழு உரங்களை பயன்படுத்த அறிவுறுத்தினார். மதுரை, வேளாண்மை அறிவியல் நிலைய உழவியல் துறை பேராசிரியர் முனைவர் இ.சுப்பிரமணியன், மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்து மண் ஆய்வு முடிவுப்படி உரமிடல், நெற் பயிரின் பூச்சி நோய் மேலாண்மை, விதை அமிர்தத்தின் முக்கியத்துவம் ஆகியவற்றை விவரித்தார். பல்வேறு வகை பயிர்களை வறட்சியி லிருந்து மீட்டெடுக்க (பிபிஎப்எம்) மெத்திலோ பாக்டீரியம் என்ற உயிர் உரத்தை ஏக்கருக்கு 300 மி.லி என்றளவில் பயன்படுத்தும் போது மேலும் 15 நாட்களுக்கு பயிர்களை வறட்சியிலிருந்து காப்பாற்ற முடியும் என்பதை வலியுறுத்தி விவசாயி ஒருவருக்கு 1 லிட்டர் உயிர் உரத்தை செயல் விளக்கத்திற்காக அளித்தார்.

மதுரை மேற்கு வட்டார வேளாண்மை அலுவலர் ம.சுபஸ்ரீ, உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் உயிர் உரங்கள் பயன் பாடு, விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் பதிவு செய்தல் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மேற்பார்வையாளர் மு.கிறிஸ்டினா, தேசிய மின்னணு வேளாண் சந்தை மூலம் நெல், தேங்காய், பயறு வகைகள் மற்றும் பாரம்பரிய நெல் இரகங்களை இடைத்தரகர்கள் மற்றும் கமிசன் இன்றி இலாபகரமாக விற்பனை செய்யும் முறை களை விவரித்தார். மேலும் பண்ணை வாயில் வர்த்தகம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். உதவி தோட்டகலை அலுவலர்

ஜி.ஜெகதீஸ்குமார், தோட்டகலைத்துறை மூலம் செயல் படுத்தபடும் மானியங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து விவரித்தார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் ராஜு, வேளாண் வணிகத் துறையின் திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்தும், விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் பதிவு செய்தல் குறித்தும் எடுத்துரைத்து, விவசாயிகளுக்கு அடையாள எண் பதிவு செய்து தரப்பட்டது. வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ராஜசேகர், சம்பா பருவத்திற்கான பயிர் காப்பீடு திட்டம் குறித்து எடுத்துரைத் தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் ரா.பாலமுருகன், ஸ்ரீஹரிணி மற்றும் பயிர் அறுவடை பரிசோதனை பணியாளர் கோ.முரளிதரன் ஆகியோர் செய்திருந்தனர்.



பயிர்களின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு நானோ யூரியா



நானோ தொழில்நுட்பத்தின் மூலமாக தயாரிக்கப்படும் திரவ வடிவிலான தழை சத்து உரமே நானோ யூரியா (NONO UREA) ஆகும். இதை இலைவழியாக தெளிப்பதன் முலமாக இலைகள் தழைசத்தை உறிஞ்சி, உடனடியாக பயிருக்கு வழங்குகிறது. மேலும் நைட்டிஜன் பயன்பாட்டு திறனை அதிகரித்து, பசுமையை மேம்படுத்த உதவுகின்றன. பக்ககிளைகள் வேர்களின் வளர்ச்சியினை ஊக்குவிக்கிறது. பயிர்களின் வீரியமான வளர்ச்சிக்கும் அதிக மகசூலுக்கும் உதவுகின்றன.

1) சாதாரண குருணை வடிவிலான யூரியா-விற்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

எளிதாக நிலத்திற்கு இதனை கொண்டு செல்ல முடியும். சாதாரண யூரியா அதிக எடையாக இருக்கும்.

2) ஒரு லிட்டர் தண்ணீருக்கு நானோ யூரியா 2 முதல் 4 மி.லி என்றளவில் கலந்து தெளிக்கலாம். ஆனால் சாதாரண யூரியா ஒரு ஏக்கருக்கு மேலுரமாக போட 20-25 கிலோ தேவை.

3) சுற்றுப்புற சூழலியலுகேற்றது நானோ யூரியா. சாதாரண யூரியா அப்படி அல்ல.

முக்கிய அம்சங்கள் என்ன?

1) நானோ யூரியாவின் துகள்களின் அளவு 20-50 நானோ மீட்டர் மீ (100nm)க்கும் குறைவு.

2) உறிஞ்சும் திறன் - இலை வழியாக தெளிப்பதால் அதிக பரப்பளவிலும் சாதாரண யூரியா விட பயிர்களுக்கு கிடைக்கிறது.

3) இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் (IFFCO) வின் தரமான தயாரிப்பு.

நானோ யூரியா பயன்படுத்தும் முறைகள்?

ஒரு ஏக்கருக்கு 500 மி.லி-யை 200 முதல் 250 மி.லி தண்ணீரில் கலந்து இலைவழியாக (FOLIAR SPRAY) விதைப்பு / நடவு செய்த 25-30 நாட்களில் தெளிக்க வேண்டும். 2வது தெளிப்பு பூக்கும் முன்போ / அல்லது 45 நாட்களில் தெளிக்க வேண்டும். இலைகளின் மீது நன்றாக படும்படி தெளிக்க வேண்டும். காலை மற்றும் மாலை நேரங் களில் தெளிக்க வேண்டும்.

பலத்த மழை மற்றும் வெயில் காலங்களில் தெளிப்பதை தவிர்க்க வேண்டும். பரிந்துரைக்க பட்ட அளவே பயன்படுத்திட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

இப்கோ விவசாயிகள் கருத்தரங்கம்



கள்ளக்குறிச்சி, நவ.25 கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சங்கத்தில் விவசாயிகள் கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பங்கேற்ற இப்கோ கள அலுவலர், சமச்சீர் உர மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்தும், இப்கோவின் நானோ உரங்களான நானோ டி.ஏ.பி., நானோ யூரியா, நானோ ஜிங்க், நானோ காப்பர், சாகரிகாமற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள், அவற்றின் நன்மைகள் மற்றும் பயன்படுத்தும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும், சங்கட ஹரன் பீமா யோஜனா திட்டம், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மற்றும் கூட்டுறவுக் கடன் திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்து, விவசாயி களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நில உடைமை பதிவு செய்ய அழைப்பு

செங்கல்பட்டு, நவ.25

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மத்திய, மாநில அரசு மானிய திட்டங்கள் பெறுவதற்கு தனித்துவ அடையாள எண் பெற வேண்டும் என மாவட்ட, வேளாண்மை இணை இயக்குநர் எம்.ஸ்டீபன் ஜெயகுமார் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் இனிவரும் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசு மானிய திட்டம் பெறுவதற்கும், விவசாய இடுபொருட்கள் பெறுவதற்கும், உரங்கள் பெறுவதற்கும், பாரத பிரதமரின் கவுரவ நிதி உதவி திட்டம் பெறவும்மற்றும் பயிர் காப்பீடு செய்யவும் ஏதுவாக தங்கள் நில உடைமை விவரங்களை பதிவு செய்து தனித்துவ அடையாள எண் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்காக, விவசாயிகள் தங்களின் நில உடைமைகளை தங்கள் வட்டார ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் பொது சேவை மையங்களில் பதிவு செய்து கொள்ளலாம். நில உடைமை பதிவு செய்யதங்கள் ஆதார் எண், ஆதாருடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் மற்றும் நில பட்டா சர்வே எண் ஆகியவை கட்டாயம். இந்த பதிவின்போது 3 முறை கடவு சொல்லின் அடிப்படையில் பதிவு மேற்கொள்ளப்படுகிறது.

எனவே, வேளாண்மை உழவர் நலத்துறை சார்ந்த அலுவலர்கள் தாங்கள் தொடர்பு கொள்ளும்போது தங்கள் விவரங்களை பகிர்வதுடன், கடவு சொல்லையும் தெரிவிக்க வேண்டும். அப்போது, உங்களுக்கான தனித்துவமான விவசாய அடையாள எண் பெறப்படும்.

ஆதார் கடவு சொல் பதிவு செய்ய முடியாத சூழ்நிலையில் கருவிழி மூலம் பதிவு செய்யலாம். இதற்காக விவசாயிகள் சுயமாக பதிவு செய்ய (TN Farmer Sahayak) செயலி மூலம் பதிவு செய்யலாம். விவசாயிகள் தங்கள் நில உடைமைகளை பதிவு செய்வதற்கு 30.11.26 அன்றே கடைசி தேதியாகும் என தெரிவித்துள்ளார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவு குறித்த விழிப்புணர்வு கூட்டம்



திண்டுக்கல், நவ.25 திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டம், அட்மா திட்டத்தின் கீழ் பொத்திநாயக்கன்பட்டி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச் சாமி, ஆலோசனைபடி வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு, செயற்கை நுண்ணறிவு மூலம் பயிர்களின் வளர்ச்சியைக் கண்காணித்தல், நோய் மற்றும் பூச்சித் தாக்குதல் களைக் கண்டறிதல், வானிலை முன்னறிவிப்பு, நீர் மேலாண்மை, மண் வளம் மற்றும் விவசாயப் பணிகளை எளிமைப்படுத்துதல் போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்து எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் சீனிவாசன் விளக்கம் அளித்தார். மேலும், விவசாயிகள் தங்களது அன்றாட வேளாண்மைப் பணிகளில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரிப்பது மற்றும் செலவுகளைக் குறைப்பது குறித்தும் எடுத்து கூறினார்.

இதனைத் தொடர்ந்து, பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள், ஊரக தோட்டக்கலைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் வேளாண்மையில் ஆளில்லா வானூர்தி தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் குறித்து விவசாயி களுக்கு விளக்கமளித்தனர். ஆளில்லா வானூர்திகள் மூலம் பயிர் களின் நிலையை கண்காணித்தல், வயல்களின் பரப்பளவை மதிப்பீடு செய்தல், பயிர்களின் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங் களைக் கண்டறிதல் மற்றும் வேளாண் பணிகளைத் துல்லியமாக மேற்கொள்ளுதல் போன்ற அதன் பயன்பாடுகளை எடுத்து கூறினர்.

இக்கூட்டம் விவசாயிகளிடையே நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், பாரம்பரிய வேளாண்மையிலிருந்து தொழில்நுட்பம் சார்ந்த வேளாண்மைக்கு

மாறுவதன் அவசியத்தையும் வலியுறுத்தியது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் நவீன தொழில்நுட்பங்களைப் பற்றிய அறிவைப் பெற்றதுடன், விவசாயிகளிடம் தங்களது தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளும் அனுபவத்தையும் பெற்றனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்பம் மேலாளர்கள் பொன் தமிழரசு அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.25

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 25.11.26 அன்று, பரங்கிப்பேட்டை, புவனகிரி மற்றும் கீரபாளையம் வட்டாரத்தில் உள்ள சிதம்பரநாதபேட்டை, மேல்மூங்கிளடி மற்றும் சாத்தமங்களம் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் சுஜெய்வேலு, சிவசங்கர் மற்றும் கலைசெல்வி ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன் பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டசத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரை களை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்தியமாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீ முஷ்ணம், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

நெற்பயிரில் சிலந்திப்பூச்சி (இலைப்பேன் / மைட்) தாக்குதலை தடுக்கும் முறைகள்



விருதுநகர், நவ.25

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு மற்றும் கான்சாபுரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் நெல் சாகுபடி செய்த பயிர்களில் தற்பொழுது பூச்சி தாக்குதல் தென்படுவதை கோவிலாங்குளம், வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் ராமசுப்பிரமணியன் மற்றும் டாக்டர் ஜீவா, பண்ணை மேலாளர், நெற்பயிரில் சிலந்திப்பூச்சி (இலைப்பேன் / மைட்) கண்டறியப்பட்டது.

தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள்

நெற்பயிரில் இலைகளின் அடிப்பகுதியில் சிலந்திப்பூச்சிகள் அதிகளவில் காணப்பட்டதால் இலைகளில் வெள்ளைத் திட்டுகள், பழுப்பு நிறமாற்றம் மற்றும் பச்சையம் இழத்தல் போன்ற அறிகுறிகள் தென்படுகிறது. இதனால் பயிரின் வளர்ச்சி பாதிக்கப் பட்டு மகசூல் குறைய வாய்ப்புள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் குறித்த விவரம்

மருந்தின் பெயர் கவனிக்க வேண்டிய அளவு

Propargite 57 EC 3 மி.லி./லிட்டர்
Spiromesifen 22.9 SC 2 மி.லி./லிட்டர்
Fenpyroximate 5 EC 1.5–3 மி.லி./லிட்டர்

முக்கிய குறிப்பு : இந்த மூன்று மருந்துகளையும் ஒன்றாகக் கலந்து தெளிக்கக்கூடாது. குறிப்பிட்ட அளவுகள் அனைத்தும் நெற்பயிருக்கான அங்கீகரிக்கப்பட்ட மருந்துகள்.

விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுரை

நெற்பயிரில் சிலந்திப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த அகாரிசைடு (Acaricide) தெளித்த பிறகு, ஒரு வார இடைவெளியில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் (BLB – Bacterial Leaf Blight) தாக்கு தலைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. சிலந்திப் பூச்சி கட்டுப்பாடு
Propargite 57 EC – 3 மி.லி./லிட்டர் தண்ணீர்
Spiromesifen 22.9 SC – 2 மி.லி./லிட்டர் தண்ணீர்
Fenpyroximate 5 EC – 1.5–3 மி.லி./லிட்டர் தண்ணீர்

2. BLB நோய் மேலாண்மை

அகாரிசைடு தெளித்த ஒரு வாரத்திற்குப் பிறகு கீழ்க்கண்ட மருந்துகள் தெளிக்க வேண்டும். Streptomycin sulphate + tetracycline - 120 கிராம், காப்பர் ஆக்சி குளோரைடு – 500 கிராம்/ஏக்கர் என்றளவில் பயன்படுத்திட விவசாயிகளுக்கு கேட்டுக் கொள்ளப் படுகிறது.

வயல் ஆய்வில் வத்திராயிருப்பு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சி.செல்வராணி, துணை வேளாண்மை அலுவலர் பா.பாலகிருஷ்ணன், விவசாயிகள் மற்றும் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் உடனிருந்தனர்.



பங்கேற்பு ஊரக மதிப்பீடு (PRA) மேற்கொண்ட வேளாண் மாணவிகள்!!



திருச்சி, நவ.25

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடியில் அமைந்துள்ள செம்பரை கிராமத்தில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் RAWE திட்ட மாணவிகள் ஆஃப்ரீன் பானு னி, ஆர்த்தி ராஜ், அபர்ணாதேவி ஊண, அபிநயா பு, அக்யா சுந்தரமூர்த்தி, அமராவதி மணிவேல், அனுபா ஸ்ரீ ராஜமாணிக்கம், அர்ப்பனா மார்சினா ம், ஆர்த்தி லு, அதிசயா பேபி பு, தீப்திலதா சாஹு, ஏக்தா ஆனந்த் ஆகியோர் ஏற்கனவே தகவல் சேகரிப்புப் பணிகளை திருஞானவேல், விவசாயியின் உதவியால் நிறைவு செய்து, பங்கேற்பு ஊரக மதிப்பீடு (Participatory Rural Appraisal - PRA) மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மாணவிகள் கிராமத்தின் மக்கள் தொகை, பயிர் அட்டவணை, வட்ட விளக்க படம், கால வரிசை போன்றவற்றை வரைபடம் மூலம் மக்களுக்கு விளக்கினர். மேலும், கிராம விவசாயிகளை நேரில் சந்தித்து, பயிர் சாகுபடியின் போது அவர்கள் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து பிரச்சினை மரம் (Problem Tree) வரைபடம் மூலம் வகைப்படுத்தி விளக்கினர். அதனைத் தொடர்ந்து, கிராமத்தில் உள்ள இயற்கை வளங்கள். நீர் நிலைகள், விவசாய நிலங்கள், சாலைகள் மற்றும் இதர முக்கிய வளங்களைக் கண்டறிந்து வள வரைபடம் (Resource Map) தயாரித்தனர். இந்தக் கள பணியின் மூலம் கிராமத்தின் சமூக, பொருளாதார மற்றும் வேளாண் நிலவரங்களை அறிந்து கொள்வதுடன், விவசாயிகளின் உண்மையான பிரச்சினைகளைக் கண்டறிய மாணவிகளுக்கு உதவியாக இருந்தது.

வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது

மயிலாடுதுறை, நவ.25

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் வட்டார ஒருங் கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் அட்மா திட்டத்தின் கீழ் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார், தலைமை வகித்து, அட்மா திட்டத்தின் மூலம் வட்டாரத்தில் நடத்தி முடிக்கப்பட்ட விவசாயிகள் பயிற்சிகள், அவற்றின் முக்கியத்துவம் மற்றும் விவசாயிகளுக்கு கிடைத்த பயன்கள் குறித்து ஆலோசனைக் குழு உறுப்பினர்களிடம் கேட்டறிந்தார். மேலும், உள் மாநில கண்டுணர்வு சுற்றுலா மூலம் விவசாயிகளை அழைத்துச் சென்றதன் பயன்கள், அங்கு விவசாயிகள் அறிந்து கொண்ட புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றை தங்களது வயல்களில் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் தியாகு வரவேற்புரையாற்றி, வேளாண்மைத் துறையின் பல்வேறு திட்டங்கள், விளைநிலம் காப்போம் விழிப்புணர்வு முகாமின் நோக்கம் மற்றும் முக்கியத் துவம், அட்மா திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் கண்டுணர்வு சுற்றுலா விவரங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத் தார். மேலும், விவசாயிகளின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் கூட்டத்தில் கேட்டறியப்பட்டன. கூட்டத்தின் நிறைவாக விவசாயி களுக்கு மானிய விலையில் செயல்விளக்க இடுபொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர் செல்வகுமார் செய்திருந்தார்.

மேலப்புலியூர் கிராமத்து விவசாயிகளுக்கு நீமாஸ்திரம் தயாரித்தல் குறித்த செயல்விளக்கப் பயிற்சி!

பெரம்பலூர், நவ.25

பெரம்பலூர் மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில், திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவர்கள், சு.பாபு, மு.தரணி தரன், கா.தருண், செ.கபீர்தாஸ், சு.நிர்மல்குமார், கு.ராகுல், மு.ரோஹித், ர.சாய்ராம், பா.சஷிகாந்த், கோ.சிவக்குமார் மற்றும் தி.தினகரன் ஆகியோர் ஆகியோர் கிராம தங்கல் திட்டம் (RAWE) மூலமாக களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.



இதன் உட்பிரிவாக, மேலப்புலியூர் கிராமத்து விவசாயிகளுக்கு நீமாஸ்திரம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து செயல்விளக்கம் அளித்தனர். இதில் வேப்பிலை, வேப்பங்கொட்டை, பசு மாட்டுச் சாணம் மற்றும் பசுமாட்டுச் சிறுநீர் ஆகியவற்றைப் பயன் படுத்தி நீமாஸ்திரம் தயாரிக்கும் முறை விளக்கப்பட்டது.

மேலும், பயிர்களைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப் படுத்துவதில் இதன் பங்கு மற்றும் பயன்படுத்தும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இயற்கை முறையில் பூச்சி களைக் கட்டுப்படுத்தி, இரசாயனப் பூச்சிக்கொல்லி களின் பயன் பாட்டைக் குறைக்கும் நோக்கில் இச்செயல்விளக்கம் நடத்தப்பட்டது.

வீட்டுத் தோட்டம் அமைப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



தூத்துக்குடி, நவ.25

தூத்துக்குடி மாவட்டம், வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம் சார்பாக கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, நான்காம் ஆண்டு பயிலும் வேளாண் மாணவர்கள் ஒட்டப்பிடாரம் அரசு தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியர் அழகம்மாள் முன்னிலையில் பள்ளி மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டம் அமைப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப் புணர்வு ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் வீட்டுத் தோட்டம் அமைக்கும் முறைகள், காய்கறிகள் மற்றும் கீரை வகைகள் வளர்ப்பு, இயற்கை உரங்களின் பயன்பாடு, வீட்டுத் தோட்டத்தின் நன்மைகள் மற்றும் சத்தான உணவின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு எளிய முறையில் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மாணவர்களிடம் நடைமுறைப் பயிற்சியாக பள்ளி வளாகத்தில் வெண்டைக்காய், தக்காளி மற்றும் மிளகாய் போன்ற காய்கறிச் செடிகள் நடவு செய்யப்பட்டன. இதன் மூலம் சிறுவயதிலிருந்தே செடிகள் வளர்ப்பதிலும் இயற்கையைப் பாதுகாப்பதிலும் ஆர்வத்தை ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியின் மூலம் பள்ளி மாணவர்களிடையே வீட்டுத் தோட்டம் அமைக்கும் ஆர்வத்தையும், சத்தான காய்கறி களைத் தாங்களே உற்பத்தி செய்து பயன்படுத்தும் பழக்கத்தையும் ஊக்குவித்தனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

பயோசார் : மண் வளத்தைப் பெருக்கும் நிரந்தரக் கரிச் செல்வம்

நவீன விவசாயத்தில் காலநிலை மாற்றம், மண் வளம் குன்றுதல், வறட்சி, இரசாயன உரத் தட்டுப்பாடு மற்றும் உரச் செலவு அதிகரிப்பு ஆகியவை பெரும் சவால்களாக உருவெடுத்துள்ளன. மற்றொரு புறம், அறுவடைக்குப் பின் எஞ்சும் பயிர் கழிவுகளை நிலத்திலேயே வைத்து எரிப்பதால் காற்று மாசுபாடு ஏற்படுவதோடு, மண்ணில் உள்ள நன்மை செய்யும் உயிரினங்களும் அழிந்து போகின்றன. குறிப்பாக, மண்ணில் அங்ககப் பொருளின் அளவு நாளுக்கு நாள் குறைந்து வருவதால், நாம் இடும் இரசாயன உரங்களின் பயன் பாட்டுத் திறனும் குறைகிறது. இச்சூழ்நிலையில், பயிர்க் கழிவுகளை வீணாக எரிக்காமல், அதை பயனுள்ள கரியாக மாற்றி மண்ணின் வளத்தை பல தலைமுறைகளுக்குப் பாதுகாக்கவும், பயிர் மகசூலை அதிகரிக்கவும் செய்யும் ஒரு நிலையான மண் சீர்திருத்தியாக பயோசார் (Biochar) திகழ்கிறது.

இத்தொழில்நுட்பத்தின் முக்கிய அம்சங்கள் மற்றும் பயன் பாடுகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

பயோசார் என்றால் என்ன?

பயோசார் என்பது வேளாண் கழிவுகளாகிய வைக்கோல், கருவேலம் குச்சிகள், தென்னை மட்டை, கரும்புச் சக்கை, பருத்தி குச்சிகள் போன்ற விவசாயக் கழிவுகளை ஆக்ஸிஜன் இல்லாத அல்லது கட்டுப்படுத்தப்பட்ட மிகக் குறைந்த ஆக்ஸிஜன் சூழலில் (350°C - 700°C) வெப்பப்படுத்திப் பெறப்படும் ஒரு நிலையான கரிமக் கரி ஆகும். இது நாம் சமையலுக்குப் பயன்படுத்தும் சாதாரணக் கரியைப் போன்றது அல்ல. சாம்பலாகிவிடாமல், நுண்ணிய துளைகளுடன் பிரத்யேகமாக மண்ணின் வளத்தை மேம்படுத்தத் தயாரிக்கப்படுவதே இதன் சிறப்பு.

பயோசார் தயாரிக்கும் முறை

பயோசார் தயாரிக்கும் முறையை பைரோலிசிஸ் என்பர்.

இதன் படிகள் :

மூலப்பொருள் உலர்த்துதல் : ஈரப்பதம் 15%க்கும் குறைவாக இருக்கும்படி விவசாயக் கழிவுகளை வெயிலில் நன்கு காய வைக்க வேண்டும்.

பைரோலிசிஸ் உலைக்குள் இடுதல் : உலர்ந்த கழிவுகளை பிரத்யேக உலை அல்லது காற்றுப் புகாத பீப்பாய்களில் (Kiln) காற்று செல்லாதவாறு இறுக்கமாக அடைக்க வேண்டும்.

வெப்பமாக்கல் : 350°C முதல் 700°C வரை சூடாக்கும்போது கழிவுகள் தீப்பற்றி எரியாமல், திடமான கார்பன் அமைப்பாக (கரியாக) மாறுகிறது.

குளிர்வித்தல் மற்றும் தூளாக்குதல் : செயல்முறை முடிந்ததும் நீர் தெளித்துக் குளிர்வித்து, பயிர்களுக்கு ஏற்ப சிறு துகள்களாக உடைக்க வேண்டும்.

பயோசாரை பயன்படுத்துவதற்கு முன் ஊட்டமேற்றுதல்

பயோசாரை வெற்று நிலையில் நேரடியாக மண்ணில் இட்டால், அது மண்ணில் உள்ள ஈரத்தையும் சத்துகளையும் உறிஞ்சி ஆரம்பத்தில் பயிர் வளர்ச்சியைத் தாமதப்படுத்தலாம். எனவே, இடுவதற்கு முன் ஊட்டமேற்றுவது மிகவும் அவசியமாகும்.

கலவை விகிதம் : 1 பங்கு பயோசாருக்கு 2 அல்லது 3 பங்கு மக்கிய சாண எரு அல்லது மண்புழு உரம் சேர்க்க வேண்டும்.

நுண்ணுயிர் கரைசல் : இக்கலவையில் ஜீவாமிர்தம், பஞ்சகவ்யா அல்லது மீன் அமிலம் தெளித்து மிதமான ஈரப்பதம் இருக்கும்படி கிளற வேண்டும்.

ஊறவைத்தல் : இக்கலவையை நிழலான இடத்தில் 10 முதல் 14 நாட்கள் மூடி வைத்தால், பயோசாரின் நுண்துளைகளில் நன்மை செய்யும் பாக்டீரியாக்களும் ஊட்டச்சத்துகளும் நிறைந்து உடனடி பலன் தரும் உரமாக மாறும்.

பரிந்துரைக்கப்படும் பயன்பாட்டு அளவுகள்

பகுதி / பயிர் வகை	பரிந்துரைக்கப்படும் அளவு	பயன்படுத்தும் முறை
விவசாய நிலம் (ஏக்கருக்கு)	1 டன் முதல் 2 டன் வரை	கடைசி உழவின் போது மக்கிய தொழு உரத்துடன் கலந்து நிலத்தில் சீராகத் தூவி உழ வேண்டும் (4 - 6 அங்குல ஆழம்).
வீட்டுத் தோட்டம் (தொட்டிகள்)	தொட்டி மண் கலவையில் 5% முதல் 10% வரை	1 தொட்டிக்கு சுமார் 100-200 கிராம் (செம்மண், தேங்காய் நார், உரம் கலவையுடன் சேர்க்கவும்).
மரப் பயிர்கள் (தென்னை, மா போன்றவை)	ஒரு மரத்திற்கு 2 முதல் 5 கிலோ வரை	மரத்தைச் சுற்றி 3 அடி தூரத்தில் வட்டப்பாத்தி அமைத்து, மண்ணை தோண்டி இட்டு மூட வேண்டும்.

பயோசாரின் நன்மைகள்

நீண்ட கால மண் வளம் : வழக்கமான மட்கும் உரங்கள் 1–2 ஆண்டுகளில் கரைந்துவிடும். ஆனால் பயோசார் நூற்றுக்கணக் கான ஆண்டுகள் மண்ணிலேயே தங்கி வளத்தைத் தக்கவைக்கும்.

கார்பன் சேமிப்பு : விவசாயக் கழிவுகளிலிருந்து உற்பத்தி செய்யப் படும் போது, biochar வளிமண்டல கார்பனை நிலையான வடிவத்தில் அடைத்து வைக்கிறது. உற்பத்தி நிலைகளைப் பொறுத்து, இது 100 முதல் 10,000 ஆண்டுகள் வரை கார்பனைச் சேமிக்க முடியும்.



நீர் சேமிப்பு மற்றும் வறட்சி தாங்கும் திறன் : இதன் பஞ்சு போன்ற நுண்ணிய துளைகள் நீரை உறிஞ்சி வைத்து, மழை இல்லாத காலங்களிலும் பயிர்களுக்குச் சீரான ஈரப்பதத்தை வழங்குகின்றன.

உர இழப்பைத் தடுத்தல் : உரங்கள் மழை நீரில் அடித்துச் செல்லப்படாமல் (Leaching) பயோசாரின் துளைகளில் ஒட்டிக் கொள்வதால், உரத்தின் செயல்திறன் கூடுகிறது.

நுண்ணுயிரிகளின் புகலிடம் : பயிர்களுக்கு நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் மற்றும் பூஞ்சைகளுக்கு இது பாதுகாப்பான வாழ்விடமாக அமைகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு : காற்றில் இருந்து தாவரங்கள் உறிஞ்சிய கார்பனை நிலத்தில் நிலைநிறுத்தி (Carbon Sequestration) புவி வெப்பமயமாதலைக் குறைக்க உதவுகிறது.

கவனிக்க வேண்டிய முக்கியக் குறிப்புகள்

ஒரு முறை இட்டாலே போதுமானது : பயோசார் மண்ணில் எளிதில் அழியாது என்பதால், ஆண்டுதோறும் இட வேண்டியதில்லை. 3 முதல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சேர்த்தால் போதுமானது.

அளவு கட்டுப்பாடு : மொத்த மண் அளவில் 10%க்கு மேல் பயோசார் சேர்க்கக் கூடாது.

வேர் மண்டலப் பயன்பாடு : மண்ணின் மேல்மட்டத்தில் விடாமல், வேர் மண்டலத்தை அடையும் வகையில் மண்ணோடு நன்றாகக் கலந்துவிட வேண்டும்.

மாறிவரும் பருவநிலைச் சூழலில், விவசாயக் கழிவுகளை வீணாக எரித்து வளிமண்டலத்தை மாசுபடுத்துவதற்குப் பதிலாக, அவற்றை பயோசாராக மாற்றி மண்ணில் இடுவது ஒரு வரப்பிரசாதமாகும். குறைந்த செலவில் மண்ணை வளப்படுத்தி, நீர் சேமிப்பை அதிகரித்து, உரப் பயன்பாட்டை குறைக்கும் இத்தொழில்நுட்பத்தை விவசாயிகள் ஒருங்கிணைத்து தங்களது சாகுபடியில் பயன்படுத்தும் போது, நிரந்தர மண் வளத்தோடு நிலையான அதிக மகசூலையும் நிச்சயமாகப் பெற முடியும்.

தகவல் : ***முனைவர் வி.அரவிந்த். தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்), முனைவர் தி.இராமநாதன், முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர், செல்வி ர.பவித்ரா, முதுநிலை ஆராய்ச்சி யாளர் (நிக்ரா), வேளாண் அறிவியல் நிலையம், காரைக்கால்.***

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!